விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 291 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 19 சனிக்கிழமை (05.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்கி

# மாகாண சபைத் தேர்தலை

# விரைவாக நடத்துங்கள்

## ஜனாதிபதி அநுரவிடம் ஜெய்சங்கர் வலியுறுத்து



(கொழும்பு)

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துங்கள் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலியில் மதுபானசாலை; எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர் வேலிப் பகுதியில் திறக் கப்படவுள்ள மதுபான சாலையினை எதிர்த்து, பொதுமக்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப் பாட்டம் ஒன் றில் ஈடுபட்ட

15

## இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பத் தொடர்ச்சியாக ஆதரவு

### விஜித ஹேரத்திடம் ஜெய்சங்கர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் பொருளா தாரத்தைக் கட்டியெழுப்பத் தொடர்ச்சியாக ஆதரவு வழங்கப் படும் என இலங்கை வெளிவிவகார அமைச்

15

### யாழ்.போதனாவில்

## உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட யுவதி மரணம்



(யாழ்ப்பாணம்)

உண்ணிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இளம் யுவதியொருவர் நேற்று யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த சத்தியசீலன் சானுஷா என்ற 19

15

## சமூக வலைத்தளங்களில் அவதூறு

### சிறீதரன் பொலிஸில் முறைப்பாடு

(கிளிநொச்சி)

தன்னை வைத்து சமூக வலைத்தளங்களில் பரப் பப்படும் அவதூறு பிரசாரங் களுக்கு எதிராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ தரனால் பொலிஸ் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறீதரன் மதுபானசாலை உரிமங்களை பெற்றுக்கொண்ட தாக முகநூல் மற்றும் ரிக்ரொக் போன்ற சமூகவலைத்தளங் களில் அவதூறான செய்தி கள் பரப்பப்படுவதாக அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இவ்வாறான அவதூறுகள் தொடர்ச்சியாக பரப்பப்பட்டு வந்த நிலையில், அவதூறு பரப்பிய நபர்களுக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸிலும், ஒட்டுசுட்டான் "சைபர் க்ரைம்" பிரிவிலும், கொழும்பு "சைபர் க்ரைம்" தலைமை யகத்திலும் கடந்த

15

## இடைநிறுத்தப்பட்டுள்ள நிவாரணங்களை வழங்க

### தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள நிவாரணங்களை வழங்க தேர் தல்கள் ஆணைக்குழு அனு மதி வழங்கியுள்ளது.

இடைநிறுத்தப்பட்டுள்ள 2024/2025 பெரும் போகத் திற்கான உரம் வழங்குதல் மற்றும் மீனவர்களுக்கான நிவாரணத் திட்டங்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

மேலும்செப்ரெம்பர் மாத நிலுவைத்

15

## 37 இந்திய மீனவர்கள் விடுதலை

(கரணவாய்)

எல்லை தாண்டிய குற்றத் துக்காக கைது செய்யப்பட்டி ருந்த 37 இந்திய மீனவர்கள் பருத்தித்துறை நீதிமன்றால் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

15

## புதிய அரசு இந்தியாவுடன் வலுவான உறவைப் பேணும்

### ஜெய்சங்கரிடம் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசாங்கம் இந்தியா வுடன் வலுவான உறவைப் பேணும் என நம்புவதாக இந்திய வெளிவிவ கார அமைச்சர் எஸ்.ஜெய் சங்கரிடம் முன்னாள்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 24 – 08 – 1971



இறைவன் அடியில் 18 – 03 – 2023

## அமரர் நடராசா நித்தியராஜ்

(பருத்தித்துறை தும்பளை முத்துராஜா புரடக்சன் நாடக மேடை அமைப்பாளர்,
முன்னாள் பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப் உரிமையாளர்)

கனவுகள் பல கண்டோம்
எம் அருகினில் நீங்கள் இருப்பீர்கள் என்று
ஆனால் நீங்காத நினைவு தந்து-நீங்கள்
நீண்ட தூரம் சென்றதேனோ?
உரிமை கொள்ள ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்களை போல எவருமில்லை எம் அருகினில்
பசுமையாய் எங்கள் மனதில்
பதிந்துவிட்ட உங்கள் நினைவுகளை
நாம் எப்படி மறப்போம்.
ஆண்டு ஒன்று உருண்டோடி மறைந்தாலும்
அகலாது உங்கள் அன்பு முகம் எம்மைவிட்டு



தம்புருவளை பிள்ளையார் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.

(381)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராயில் 27 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்**

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750M தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற்வீதி 250M தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மாலை 6.00 வரை

(2209)

**077 288 0152, 076 739 0413**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடியில் 60 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00- மாலை 6.00
- தரகர் தேவையில்லை

(2209)

**077 294 1521**
**077 468 3354**



## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

அன்புடையீர்!

குரோதி வருடம் ஆவணித் திங்கள் 7ம் நாள் (23.08.2024 வெள்ளிக்கிழமை) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகரத்தினம் தனபாலசிங்கம்

(ஓய்வுநிலை அதிபர் - யா/வட்டு இந்துக் கல்லூரி)

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் குரோதி வருடம் புரட்டாதி 20ம் நாள் (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் திவ்ய மஹால் மண்டபத்தில் (இல.1001, வண்ணார்பண்ணை, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறும் . அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

[இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.] (2212)

39/1, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர் (077 404 9383)

## 24 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **பொன்னையா குகதாசன்**

(பிரபல கட்டடக் கலைஞர்)

திதி: வளர்பிறை திருதியை
05.10.2024

அன்புடனும் அறத்துடனும்
எமை வளர்த்தீர்கள்
அவனியில் எமை உயர்த்த அரும்பாடுபட்டீர்
ஒழுக்கத்துடனும் நேர்மையுடனும்
வாழ வழி சமைத்தீர்
ஆலடியான் தாழ் பணிந்து
தினமும் எமக்காக வேண்டினீர்கள்
உம் வழியில் எம் பணிகள் தொடரும் அப்பாவே!

(397)

தோற்றம் 21.11.1937 — மறைவு 30.09.2000

"கேமாலயம்"
மனோகரா,
அல்வாய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



மலர்வு 17.11.1943 — உதிர்வு 01.10.2024

## திரு. கதிரவேலு கனகசபாபதி

(ஓய்வு பெற்ற வடமாகாண மின்சார சபை களஞ்சியப் பொறுப்பாளர்)

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கனகசபாபதி அவர்கள் 01.10.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற குணேஸ்வரி(குணம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, குகதாசன் மற்றும் நல்லநாதன், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரஸ்வதி(மணி), காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சறோஜினி, அனுஷியா, காலஞ்சென்ற சதானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்ற பரமலிங்கம் அவர்களின் அன்புச் சகலனும்,தயாபரன், காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் கிருபாகரன், காலஞ்சென்ற ஜெயாதரன் மற்றும் சுசிகலா, யஜந்தன், யசித்தா, யனூதா ஆகியோரின் அன்பு மாமனாரும் சொர்ணரூபா, மதுமதி, அகிலன், அசந்தன், சயந்தன், டிலான், மதுஷா, தனுசன் ஆகியோரின் பெரியப்பாவும், தமிழ்வாணி(வாணி), சிவகுமார் (சிவா), நந்தகுமார்(பாபா), காலஞ்சென்ற உதயகுமாரி(வதனி) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை 06.10.2024 ஞாயிற்றுக் கிழமை மு.ப 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.42 திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(C-1339)

தகவல் :
குடும்பத்தினர்
021 222 6748

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய மட்ட கோலூன்றி பாய்தல் போட்டியில் யாழ்ற்ரன் கல்லூரி வெண்கலம்



அகில இலங்கை பாட சாலைகள் மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற 92 ஆவது சேர் ஜோன் காபற் தடகள போட்டியில் கோலூன்றி பாய்தலில் யா/காரை நகர் யாழ்ற் ரன் கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த ம.டர்சனா வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றி யுள்ளார்.

அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான தேசிய மட்ட சேர் ஜோன் காபற் தடகள போட்டிகள் கொழும்பு சுகதாஸ மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 18 வயது பெண்களுக்கான கோலுன்றிப் பாய்தல் போட்டியில் யா/காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி யைப் பிரதிநிதித்துவம் செய்த மதியழகன் டர்சனா 2.40 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப்பதக் கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது. (6-90)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 130 | 200 | 100-190 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 280 | 250-300 | 300 |
| தக்காளி | 300 | 280 | 280 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 260 | 200 | 150-200 | 200 |
| கோவா | 230 | 300 | 280 | 220 | 200 |
| கரட் | 200 | 200 | 250 | 180 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 120 | 100 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 300 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 450 | 600 | 350 | 600-650 | 400 |
| வெண்டக்காய் | 200 | 150 | 100 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 350-400 | 400 |
| லீக்ஸ் | 320 | 300 | 300 | 230 | 350 |
| பீற்றூட் | 100 | 150 | 180 | 150 | 240 |
| கறிமிளகாய் | 400 | 600 | 600 | 360 | 500 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 400 | 200-300 | 250 |
| போஞ்சி | 350 | 450 | 550 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 160 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 130 | 100 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 400 | 450 | 450-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 140 | 160 | 80-150 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 800 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 500 | 400 | -- | 450 |
| முள்ளங்கி | 80 | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 120 | 100 | 100 |
| வல்லாரை | 160 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 160 |

## சம்பியன் பட்டம் வென்ற அல்காரஸ்



சீன ஓபன் டென்னிஸ் ஒற்றையரில் ஸ்பெயி னின் அல்காரஸ் சம் பியன் பட்டம் வென்றார்.

சீனாவின் பீஜிங்கில், ஏ.டி.பி., சீன ஓபன் டென் னிஸ் தொடர் இடம் பெற் றது. இதன் ஒற்றையர் பைனலில், "நடப்பு சம் பியன்" உலகின் "நம்பர்-1" இத்தாலியின் ஜானிக் சின்னர், உலகின் "நம்பர்-3" ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் மோதினர்.

"டை பிரேக்கர்" வரை நீடித்த முதல் செட்டை சின்னர் 7-6 எனக் கைப்பற்றினார்.

பின் எழுச்சி கண்ட அல் காரஸ், இரண்டாவது செட்டை 6-4 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட் "டை பிரேக்கர்" வரை சென்றது.

இதில் அசத்திய அல்காரஸ் 7-6 என வென்றார்.மூன்று மணி நேரம், 21 நிமிடம் நீடித்த போட் டியில் அல்காரஸ் 6-7, 6-4, 7-6 என்ற கணக்கில் வெற்றி பெற்று, சீன ஓபனில் முதன் முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற் றினார்.

தொடர்ச்சியாக 14 போட்டிகளில் வெற்றி கண்ட சின்னரின் வெற்றி நடைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டமை குறிப்பி டத்தக்கது. (6)

## 1200 கி.மீ சைக்கிள் பயணம்; டோனியை சந்தித்த ரசிகர்



இந்திய அணியின் வெற்றிகர கப்டன்களில் ஒருவர் எம்.எஸ். டோனி. சர்வதேச கிரிக்கெட்டில் ஓய்வு பெற்றுவிட்ட பின்னர் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் விளை யாடி வருகிறார். உலக எவில் எம்.எஸ். டோனிக்கு ரசிகர்கள் அதிகம்.

இந்த நிலையில், எம்.எஸ். டோனியை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்ற ஆசையில் ரசிகர் ஒருவர் டெல்லியில் இருந்து 1200 கிலோமீற்றர்கள் சைக் கிளில் பயணம் செய்து ராஞ்சிவந்தடைந்தார். ராஞ்சியில் உள்ள டோனியின் வீட்டு வாச லில் கூடாரம் அமைத்து தங்கிய ரசிகர், டோனியைச் சந்திக்காமல் வீடு திரும்புவதில்லை என்ற கணக்கில் அங்கேயே தங்க ஆரம்பித்தார்.

டில்லியைச் சேர்ந்த கௌரவ் குமார், தனது சைக்கிள் பயணம் மற்றும் டோனியைப் பார்க்கும் ஆசை மற்றும் அதற்கான முயற்சி உள்ளிட்ட தகவல்களை தனது சமூக வலைதளத்தில் தொடர்ச் சியாக பதிவிட்டு வந்தார். அதன் மூலம் டோனிக்கு எப்படியும் தகவல் கிடைத்து, அவரை பார்க்க முடியும் என்று எண்ணியிருந்தார்.

கிட்டத்தட்ட ஐந்து நாட்கள் வரை டோனியைச் சந்திக்க அவ ரது வீட்டு வாசல் அருகிலேயே கூடாரம் அமைத்து தங்கிய நிலையில் கௌரவ் குமார் ஒரு வழியாக டோனியைச் சந்தித் தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட வீடியோவில், "நான் டில்லியில் இருந்து சென்னைக்கு பயணம் செய்து டோனியைச் சந்திக்கத் திட்டமிட்டேன். ஆனால் அவரை சந்திக்க முடியவில்லை. இதனால் சென்னையில் இருந்து புறப்பட்டு மீண்டும் டில்லி வந்து விட்டேன்."

"தற்போது டில்லியில் இருந்து ராஞ்சிக்கு பயணம் செய்தேன். அங்கு 5-6 நாட்கள் காத்திருந்த பிறகு அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. தற்போது நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக் கிறேன். என் வாழ்க்கையின் அடுத்த பயணத்தை தொடங்கத் தயாராகி இருக்கிறேன்." என அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டும்

## எரிக்சொல்ஹெய்ம் வலியுறுத்து

**(கொழும்பு) சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டும் என தெரிவித்துள்ள இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார தெரிவு செய்யப்பட்டு இரண்டு வாரங்களாகின்றன இந்த காலத்தை அவர் சிறப்பாக பயன்படுத்தியுள்ளார் என குறிப்பிட்டுள்ளார்**

சமூக ஊடகப் பதிவில் எரிக்சொல்ஹெய்ம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார தெரிவு செய்யப்பட்டு இரண்டு வாரங்களாகின்றன. இந்த காலத்தை அவர் சிறப்பாக பயன்படுத்தியுள்ளார்.

அவர் இராஜதந்திர செயற்பாடுகளை மிகச்சரியான முறையில் முன்னெடுத்துள்ளார். முதலில் இந்தியத் தூதுவருடன் சந்திப்பு, பின்னர் சீன தூதுவருடன், இதன் முக்கியமான நாடு என பார்த்தால் இந்தியாவிற்கே முதலிடம் அதற்கு பின்னரே சீனா என்ற சமிக்ஞையை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அதன் பின்னர் அனைத்து நாடுகளினதும் தூதுவர்களை அவர் சந்தித்துள்ளார். மேற்குலகம் , ரஷ்யா மேலும் பல நாடுகள்.

இலங்கைக்கு முதலிடம் என்ற வெளிவிவகார கொள்கையே பின்பற்றப்படும் என்ற சமிக்ஞையை அவர் வெளியிட்டுள்ளார்.

பதவியேற்றதும் அநுரகுமார திஸாநாயக்க உடனடியாக கண்டியில் தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அவர் அங்கு மகாநாயக்க தேரர்களின் ஆதரவை பெற்றார்.

அதன் பின்னர் அவர் தமிழ் முஸ்லீம் அரசியல் மதத் தலைவர்களை சந்தித்துள்ளார்.

அனைத்து இனசமூகத்திற்குமான இலங்கையை உருவாக்குவதற்கான அவரது வலியுறுத்தல்கள் வலுவானவையாக காணப்படுகின்றன.

அவர் வர்த்தக சமூகத்தினை நோக்கி தனது கரங்களை நீட்டியுள்ளார். வர்த்தக சமூகத்துடன் இணைந்து நெருக்கமாக பணியாற்றுவதன் மூலமே வளமான இலங்கையை கட்டியெழுப்ப முடியும், கல்வி சுகாதாரம் மற்றும் வறியவர்களிற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வளங்களை கொண்டுவரமுடியும் என்பதை அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அவர் ஊழல் அற்ற குழுவினரை அரச அதிகாரத்திற்கு கொண்டுவந்துள்ளார். அமைச்சர்களிற்கு ஆடம்பர கார்களிற்கான சலுகைகளை நிறுத்தியுள்ளார். அரச தலைவர்களிற்கு ஆடம்பரமற்ற வாழ்க்கை என்பதை அவர் இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இவை அனைத்தும் இலங்கையின் பிரச்சினைகளிற்கு தீர்வை காணப்போவதில்லை.

இடதுசாரி தலைவர் குறித்து இராஜதந்திரிகள் மத்தியில் காணப்படும் சந்தேகத்தை இது போக்காது.

ஆனால் இது நிச்சயமாக சிறந்த ஆரம்பம்.

அமைதியான,பலமத, பசுமையான செழிப்பு மிக்க இலங்கையை கட்டியெழுப்ப அனைவரும் அநுரகுமார திஸாநாயக்கவிற்கு உதவவேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# எரிவாயு விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

தமது எரிவாயுவின் விலையில் இம்மாதம் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படாது என்று லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நிரோசன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள விலைகளே ஒக்டோபர் மாதமும் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, லிட்ரோ எரிவாயு நிறுவனமும் இம்மாதம் தமது எரிவாயு விலைகளில் மாற்றம் எதனையும் செய்யப்போவதில்லை என்றும் ஏற்கனவே உள்ள விலைகளின் அடிப்படையிலேயே இம்மாதமும் எரிவாயு விற்பனை இடம்பெறும் எனவும் அறிவித்திருந்தது.

அத்துடன், உலக சந்தையில் எரிவாயுவின் விலையில் அதிகரித்துள்ள போதிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் தமது உள்நாட்டு எரிவாயு விலையை அதிகரிக்க வேண்டாம் என்று தாம் தீர்மானித்துள்ளதாகவும் லிட்ரோ நிறுவனம் முன்னதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐ.தே.க உடனான கூட்டணி

## பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை



(கொழும்பு)

பொதுத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியளிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் முன்னேற்றகரமானதாக அமையவில்லை.

நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமே ஒன்றிணைவதற்கு முடிவு செய்திருந்தோம்.

எனினும் ஐக்கிய தேசியக் கூட்டணியுடன் இணைவதற்கு எவ்வித இணக்கப்பாட்டையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன்வைத்திருந்தோம்.

தாம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் இருதரப்பினருக்கும் இடையில் எவ்வித இணக்கப்பாடும் ஏற்படவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

05.10.2024
புரட்டாதி, 19 சனிக்கிழமை
திருதியை பின்னிரவு 5.56 மணிவரை
சுவாதி முன்னிரவு 8.55 மணிவரை

சுபநேரம் 3.02-4.32 மணி வரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
அமிர்தசித்தம், வள்ளலார் பிறந்த தினம். உலக ஆசிரியர் தினம்.

சந்திராஷ்டமம்- பூரட்டாதி,உத்தரட்டாதி.

வளவன்



மேஷம்

விருந்தினர் வருகையுண்டு,சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.



கடகம்

பெற்றோர் மீது பிரியம் கூடும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.



துலாம்

செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.



மகரம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.



ரிஷபம்

உடல்நலன் சீராகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.



சிம்மம்

மனை சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



விருச்சிகம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம்.



கும்பம்

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளமுற்படுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.



மிதுனம்

குடும்பத்தில் குதூகலம் கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாகன சுகமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.



கன்னி

பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், அம்பிகை வழிபாடு காரிய வெற்றி தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.



தனுசு

விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும், போசன சுகமுண்டு.



மீனம்

குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிழையை சரிப்படுத்திக் கொள்ள முயற்சி செய்வதில் அவமானம் இல்லை.**

# வீதித்தடை தொடர்பான மாநகரசபையின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலை வீதியிலுள்ள மதகு புனரமைப்பு செய்யப்படவுள்ளமையால் வீதித்தடை தொடர்பில் யாழ். மாநகர ஆணையாளர் ச. கிருஷ்னேந்திரன் அறிவித்துள்ளார்.

புகையிரத நிலைய வீதி, வைத்தியசாலை வீதி சந்தியிலிருந்து 3 ஆம் குறுக்கு தெரு வைத்தியசாலை வீதி வரை புனரமைப்பு எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 7.12.2024 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளமையால் ஆறடி (6'0") அகலத்திற்கு உட்பட்ட வாகனங்கள் குறித்த வீதியூடாக பயணிக்க முடியும்.

அதேவேளை இவ் வீதிகளில் கனரக வாகனங்களை பயன்படுத்துவோர் போக்குவரத்தினை சிரமமின்றி மேற்கொள்ள மாற்றுப் பாதையினை பயன்படுத்து மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (6)

# பண்ணைப் பகுதியில் சிரமதான நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணை சுற்று வட்டப் பகுதிகளில் நேற்றுக் காலை சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. சுகாதாரத் தரப் பினர், பொலிஸ், இராணுவத்தினரின் பங்களிப்புடன் நடைபெற்ற இந் நடவடிக்கையில் பிளாஸ்ரிக் பொருட்கள் சேகரிக்கப்பட்டதுடன் விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் பிளாஸ்ரிக் சேகரிக்கும் கூடைகளும் ஆங்காங்கே வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான ம.பிரதீபன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அருள்ராஜ், வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் சமன் பத்திரண, யாழ். பிரதேச செயலாளர் சுதர்சன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், இராணுவ பொலிஸ் உயர் அதிகாரிகள், கடற்படையினர், சுகாதார உத்தியோகத்தர்கள், யாழ். மாநகர சபை ஊழியர் கள் என பலரும் கலந்து கொண்டனர். (6-33)

## சந்நிதியான் ஆச்சிரம முதியோர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஆச்சிரமத்தில் முதியோர் தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஓய்வு பெற்ற மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஓய்வு நிலை விரிவுரையாளர் அ.குமாரவேல், ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி. பரமேஸ்வரி சிவனொளிபாதம் மற்றும் யாழ். தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி. வினோதினி ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (6)

# வாக்குகளை சிதறடிக்காது தமிழ் கட்சிகள் ஒன்று சேர வேண்டும்

## வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு கூட்டாக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் வடக்கு- கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தேசிய இன பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காக தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலில் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு கூட்டாக அழைப்பு விடுத்துள்ளது.**

யாழில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

நிலையான, கௌரவமான உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு கோரி எமது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவானது 2022 கார்த்திகை எட்டாம் திகதி சமஷ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டிருந்தது.

இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வந்து விட்டனர்.

எமது வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவானது தமிழ் தேசியப் பரப்பிலுள்ள தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் அரசியல் தலைமைகளுக்கு ஓர் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கிறது.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் பொதுத்தேர்தலில் போட்டியிடப்போகும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், கட்சி ரீதியாக தனித்து போட்டி இடாமல் கூட்டணியாக தேர்தலில் போட்டி இட்டு வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் அதிக மக்கள் பிரதிநிதிகளை பாராளு மன்றம் அனுப்ப வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் கூட்டாக இணையாத சந்தர்ப்பத்தில் வாக்குகள் சிதறப்பட்டு பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் குறைவடைவதுடன், குறிப்பாக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களை இழக்க வேண்டி நேரிடும் எனத் தெரிவித்தனர். (6-33)

## நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

"ஈழத்து சித்தர்கள் சித்தம்" நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்:பலாலி வீதி, ஊரெழுவில் அமைந்துள்ள பூரண நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் மேலைத் தேயத்தவர்களின் தமிழ் பஜனையும் புத்தக வெளியீடும் ஆன்மிக உரையும் மற்றும் நூல் வழங்கலும் இடம்பெறவுள்ளது. (6)

# வெளிவந்த ஞானச்சுடர்

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்த வெளியீடாக வெளிவரும் ஞானச் சுடரின் 319 ஆவது மலர் வெளிவந்துள்ளது.

ஆவணி மாதத்திற்கான ஞானச்சுடரின் 319 ஆவது மலர் வெளியீடு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# டெங்கினைக் கட்டுப்படுத்தல் தொடர்பிலான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மழைக்காலம் வருவதனால் டெங்கு நோய் வராமல் தடுப்பதற்குரிய வழிவகைகள் ஆராயப்பட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சமன் பத்திரண, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், சிரேஷ்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச சபை செயலாளர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (6-33)

# கலாசாலையில் ஆசிரியர் தின விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர் மன்றம் நடத்தும் சர்வதேச ஆசிரியர் தின விழா இன்று காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் பிரதி முதல்வரும் இலங்கையின் புகழ் பூத்த நடனத்துறை விற்பன்னருமாகிய கலா கீர்த்தி சாந்தினி சிவனேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (6)




**மகாத்மா காந்தியின் 155 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு இந்திய துணைத்தூதரக அதிகாரிகளால் யாழில் பண்பாட்டு மைதானத்தில் கடந்த 2 ஆம் திகதி மரம் நடுகை நிகழ்வு இடம்பெற்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தும் டெங்கு!

## யாழில் 4792 நோயாளர்கள் பதிவு

(கொழும்பு)

**நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இதற்கமைய, 39,698 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது 16,766 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் இம்மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 4,792 நோயாளர்களும், மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் 4,091 நோயாளர்களும், சப்ரகமுவ மாகாணம், கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் 4,012 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 19 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>1 இல் சூரி செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Bsc, Software Engineer (pvt)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/14807 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 17<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: LLB, Lawyer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/14822 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>12 இல் செவ்<br>கி.பா: 10 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: IT, IT Department<br>எதிர்பார்ப்பு: பிள்ளைகளற்ற விவாகரத்தானவர்<br>தொ.இ: B/14808 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/14824 |
| பிறப்பு: 1995 RC<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: Software Engineer<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14809 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>11 இல் சூரி செவ்<br>கி.பா: 1 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HND, Office Staff (pvt)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ: G/14825 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# ஆதரவாளர்களுக்கு அரச உயர்பதவி

## சஜித் தரப்பு சாடல்

(கொழும்பு)

அரச சேவைகளில் பொருத்தமான நபர்களுக்குப் பதிலாக, ஜனாதிபதிக்கு ஆதரவானவர்கள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதால் அரச துறை பிரச்சினையை எதிர்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் முஜிபுர் றஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் அண்மைக்கால அரச சேவைகளுக்கான நியமனங்கள் அவரது தேர்தல் பிரசாரத்திற்கு ஆதரவாக இருந்தவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான அரச துறை ஊழியர்கள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கு வாக்களித்தனர்.

60% - 70% வாக்குகள் தேசிய மக்கள் சக்தியினருக்கு கிடைத்தமையை அஞ்சல் வாக்குகள் இதை நிரூபிக்கின்றன.

எவ்வாறாயினும் அரச சேவைகளில் பொருத்தமான நபர்களுக்குப் பதிலாக ஜனாதிபதிக்கு ஆதரவானவர்கள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதால், அரச துறை ஒரு பிரச்சினையை எதிர் கொள்கிறது.

அரச துறையினர் இதனை எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்த அவர், அரச சேவைகளுக்கு அரசியல் ரீதியாக நியமனம் பெற்றவர்களை ஜனாதிபதி அகற்றி, தகுதியான ஊழியர்களுக்கு இத்துறையில் மேல்நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பை வழங்குவார் என எதிர்பார்க்கின்றோம்.

அரச சேவைகளுக்கு அரசியல் நியமனம் பெற்றவர்கள் மீது கடந்த காலத்தில் தேசிய மக்கள் சக்தி எழுப்பிய குற்றச்சாட்டுகள், வாக்குறுதி அளித்தபடி மாற்றங்களைச் செய்யப்படுத்தாமல், புதிய நிர்வாகத்தால் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன.

இது எதிர்காலத்தில் அரச துறைக்குள் நெருக்கடியை ஏற்படுத்தும் எனவும் முஜிபுர் றஹ்மான் எச்சரித்துள்ளார். (நி)


லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (394)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



# பசுக்கள் மூன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

மு.மா.சி.க.கூ.ச. சமாசத்திற்கு சொந்தமான மூன்று நல்லினப்பால் பசுக்கள் 9 ஆம் வட்டாரம் மல்லிகைத் தீவு மு.புதுக்குடியிருப்பிலுள்ள புனித அந்தோனியார் கோவிலடியில் அமைந்துள்ள பண்ணையில் 2024.10.08 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. அதன் விபரம்

| பசுக்களின் இனம் | வயது | நிறம் | உயிரோடு உள்ள நிறை | சினைப்பட்ட திகதி | சினைப்பட்ட முறை | பால் கறக்கும் அளவு |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| யேசிக்கலப்பு | 05 | கறுப்பு | 320 கி.கி | 2024.01.24 | சிந்து நாம்பன் | 8 லீற்றர் |
| பிறிசியன் யேசிக்கலப்பு | 06 | கறுப்பு | 227 கி.கி | 2024.05.29 | சிந்து நாம்பன் | 6 லீற்றர் |
| AFS கலப்பு | 05 | கறுப்பு | 320 கி.கி | 2024.05.29 | சிந்து நாம்பன் | 7 லீற்றர் |

தகவல்:
தலைவர்,
சி.க.கூ சங்கங்களின் சமாசம்.
077 345 2720, 070 212 6196,
[illegible]
(C-1337)


# வலயக்கல்வி அலுவலகத்தின் செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக்கல்வி அலுவலகம் நடத்தும் "செயற்பட்டு மகிழ்வோம்" வலய மட்ட ஆரம்பப் பிரிவு விளையாட்டு நிகழ்வு இன்று சனிக் கிழமை காலை 9 மணியள வில் யா/ சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ். வலயக் கல்வி அலுவலகப் பணிப்பாளர் திருமதி ஐ.ராஜசீலன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்வித் திணைக்களப்பணிப்பாளர் க.ஜெ.பிறட்லி முதன்மை விருந்தினராகவும் லயன் இ. எஸ்.பி. நாகரத்தினம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வீடு திரும்பினார் ரஜினி



(புதுடில்லி)
சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் சிகிச்சைகளின் பின்னர் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் சென்னை அப்பல்லோ வைத்தியசாலையில் இருந்து வீடு சென்றார்.

இருதயத்தில் இருந்து வெளியேறும் ரத்த நாளத்தில் ஏற்பட்ட வீக்கத்திற்காக ரஜினிகாந்திற்கு, அதனை அறுவைச் சிகிச்சை செய்து அகற்றாமல், டிரான்ஸ் கேட்டர் முறையில் இரத்த நாளத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டது.

ஒக்டோபர் 1 ஆம் திகதி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட சிகிச்சைக்குப் பிறகு அவர் வைத்தியசாலையில் இரண்டு நாட்கள் கண்காணிப்பில் இருந்தார்.

இந்த நிலையில் அவரது உடல்நிலை முன்னேற்றம் அடைந்ததால் வைத்தியசாலையில் இருந்து வெளியேறினார்.

எனினும் ரஜினிகாந்தை ஓரிரு வாரங்கள் ஓய்வில் இருக்குமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது உடல் நிலை முன்னேறியவுடன் இயக்குனர் லோகேஷ் கனகராஜின் கூலி திரைப்படத்தின் பணியை மீண்டும் தொடங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## பிரிட்டன் எண்ணெய் கப்பலை தாக்கிய ஹவுதிக்கள்

(பெய்ரூட்)
பாலஸ்தீனத்தை தொடர்ந்து லெபனானிலும் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலை எதிர்த்து ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதால் மத்திய கிழக்கில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து லெபனானில் ஹிஸ்புல்லாவினரை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் ஏமனைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்களும் இஸ்ரேல் மற்றும் மேற்கு நாடுகளுக்கு எதிரான தாக்குதலை முன்னெடுத்துள்ளனர்.

செங்கடல் வழியாக வரும் கப்பல்களைத் தாக்குவோம் என்று ஹவுதிக்கள் தரப்பில் இருந்து கப்பல் நிறுவனங்களுக்கு மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டது. இந்த நிலையில் செங்கடலில் வந்த பிரிட்டன் எண்ணெய் கப்பல் மீது இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய தாக்குதலை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தியுள்ளனர்.

கார்டெலியா மூன் எனப்படும் பிரிட்டிஷ் எண்ணெய் டேங்கர் கப்பல் மீது வெடி பொருள் நிரப்பப்பட்ட ட்ரோன் படகை மோதவைத்து ஹவுதிக்கள் வெடிக்கச்செய்துள்ளனர். ஏமனில் ஹவுதிக்கள் கட்டுப்பாட்டில் உள்ள துறைமுக நகரமான ஹுதைதாவில் இருந்து 110 கிலோ மீற்றர் தூரத்தில் நடந்த இந்த தாக்குதல் நடந்துள்ளது. மேலும் கார்டெலியா மூன் கப்பல் மீது 8 பாலிஸ்டிக் மிசைல்களை ஏவியும், டிரோன் மூலமாகவும் தாக்குதல் நடத்தினோம் என்று கூறியுள்ள ஹவுதிக்கள் கப்பல் தீப்பற்றி எரியும் வீடியோவை வெளியிட்டுள்ளனர். (நி)

## குப்பையில் கிடந்த ஓவியத்தால் கிடைத்த 50 கோடி



(வத்திக்கான்)
60 ஆண்டுகளுக்கு முன்பு தனது தந்தை குப்பையிலிருந்து எடுத்த ஓவியத்தை பிக்காஸோவின் ஓவியம் என்று மகன் கண்டுபிடித்த நிலையில், தற்போது அந்த ஓவியத்தின் விலை ரூ.50 கோடி என்று தெரிய வந்துள்ளது பெரும் வியப்பினை ஏற்படுத்தியுள்ளது. நம்மில் பலருக்கும் பழைய பொருட்கள், கலைப் பொருட்களை சேகரித்து வைக்கும் பழக்கம் இருக்கும். அந்தவகையில் இத்தாலியில் பழைய பொருட்களை சேகரிக்கும் தொழிலாளியான லுங்கி லோ ரோஸா என்பவர், 1962 ஆம் ஆண்டு ஒருநாள் கேப்ரி தீவில் உள்ள பங்களா ஒன்றின் குப்பையிலிருந்து ஒரு அழகான ஓவியத்தை எடுத்துள்ளார்.

அதை வீட்டுக்கு கொண்டு சென்றபோது 'இதுதான் பின்நாட்களில் தன் குடும்பத்துக்கு பணத்தை கொட்டி கொடுக்கபோகிறது' என்று அவருக்கு தெரியவில்லை. கடந்த 2021ஆம் ஆண்டு வயது முதிர்வால் லுங்கி லோ ரோஸா இறக்கவே, இறப்பதற்கு முன்பாக, தனக்கு பிரத்யேகமான அந்த ஓவியத்தை தனது மனைவியிடம் கொடுத்து விட்டு இறந்துள்ளார்.

அவரின் ஞாபகமாக, மனைவியும் அந்த ஓவியத்தை தன் வீட்டு சுவற்றில் ஒரு ஓரமாக மாட்டியுள்ளார். இந்தநிலையில், லுங்கி லோவின் மகன், சுமார் 60 ஆண்டுகளுக்கு பிறகு, தனது வீட்டில் மாட்டி இருந்த அந்த ஓவியத்தை எதார்த்தமாக ஆராய்ந்து பார்த்துள்ளார். அப்போது அது பார்ப்பதற்கு பிக்காசோவின் ஓவியம் போல இருந்துள்ளது.

இதனால், பெரும் வியப்பில் ஆழ்ந்த லுங்கி லோவின் மகன், ஓவியத்தில் இருப்பது, பிக்காசோவின் கையெழுத்து என்று உறுதி செய்து கொண்டார்.

இதனையடுத்து, இந்த ஓவியத்தின் மதிப்பு இப்பொழுது எவ்வளவாக இருக்கும் என்று சோதிக்கவே, சுமார் 50 கோடி அதாவது 6 மில்லியன் என்று அறியவே, அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளார் லுங்கி லோவின் மகன்.

இந்த செய்தி தற்போது சமூக வலைத்தளங்களில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த ஒன்றாக மாறி வருகிறது. மேலும் 20 ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற ஓவியராக கருதப்பட்ட பிக்காசோவின் ஓவியங்கள் இன்றும் பல கலைப்பிரியர்களால் விரும்பி வாங்கப்படும் ஒன்றாக இருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்தில்லை என்பதால் லோவின் குடும்பம் தற்போது ஜாக்பாட் அடித்துள்ளது என சிலாகிக்கின்றனர் நெட்டிசன்கள். (நி)

## ஈரான் வெளிவிவகார அமைச்சர் லெபனான் விஜயம்



(டெஹ்ரான்)
ஈரான் வெளிவிவகார அமைச்சர் லெபனானிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஈரான் வெளிவிவகார அமைச்சர் அபாஸ் அரக்சி பயணம் செய்த ஈரான் விமானம் ரபிக் ஹரீரி சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது என லெபனானின் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

லெபனானின் விமான நிலையத்திற்கு அருகில் இஸ்ரேல் தாக்குதலை மேற்கொண்டுள்ள நிலையிலேயே ஈரான் வெளிவிவகார அமைச்சர் லெபனானிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். (நி)

## அதிக... இல... பெய்...

(பெய்ரூட்) —
மத்திய கிழக்கி... ரித்துவரும் நிலை... சர்வதேச விமா... வைத்து இஸ்ரே... கொண்டுள்ளது.

ஹிஸ்புல்லாவின் புலனாய்வுத்துறை தலைமையகத்தினை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

விமான நிலையத்திற்கு அருகில் ஹிஸ்புல்லாவின் புலனாய்வுத்துறை தலைமையகத்தினை இலக்கு வைத்து இஸ்ரேல் தொடர் வான்தாக்குதல்களை மேற்...

## பாகிஸ்தானில்... இம்ரான் கட்சி...



(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில், முன்னாள் பிரதமர் இம்ரான்கானை விடுவிக்கக்கோரி போராட்டம் நடத்திய தெரீக்-இ-இன்சாப் கட்சியை சேர்ந்த 700 பேர் கைதாகி உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கரிக்கும் போர் பதற்றம்!

# ...லக்கு வைக்கப்பட்ட

# ...ரூட் விமான நிலையம்

**...க்கில் போர்ப்பதற்றம் அதிக ...நிலையில் லெபனான் பெய்ரூட் ...மான நிலையத்தினை இலக்கு ...ஸ்ரேல் வான்தாக்குதல் மேற் ...து.**



கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது

எவ்வாறாயினும் இந்த தாக் குதல் தொடர்பாக இஸ்ரேல் இரா ணுவம் கருத்து வெளியிட வில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள் ளது

லெபனான் இராணுவம் மற் றும் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக இஸ்ரேல் படையினர் தொடர் தாக்குதல்களை மேற் கொண்டுள்ளதாகச் சர்வ தேச ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

இஸ்ரேல் லெபனான் போர்பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் ஈரான் இஸ்ரேல் மீது 400 இற்கும் மேற்பட்ட ஏவுகணை தாக் குதல்களை மேற்கொண் டிருந்தது.

எவ்வாறாயினும் இஸ் ரேலுக்கு எதிராக அண் மையில் ஈரான் பாரிய ஏவுகணைத் தாக்குதல் களை மேற்கொண்டிருந்த நிலையில் இரண்டு நாட்க ளுக்கு பின்னர் பெய்ரூட் விமான நிலையம் அருகில் இஸ்ரேல் மேற்கொண்ட பாரிய தாக்குதல் இதுவாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. இதேவேளை கடந்த ஆண்டு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்களை ஆரம்பித்ததில் இருந்து இதுவரையான காலப் பகுதி யில் சுமார் 2000 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ள தாகவும் தெரிய வந்துள் ளது. (நி)

## ...ில் வலுக்கும் போராட்டம் ...ட்சியினர் 700 பேர் கைது



இம்ரான் கான், கடந்த ஆண்டு 2023 ஒகஸ்ட் 5 முதல் பல்வேறு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் இருந்து வருகி றார்.

அவரை விடுவிக்க வலியுறுத்தி அவரது கட்சியினர் தொடர் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டமும் அந்நாட்டில் நாளுக்கு நாள் வலுவ டைந்து வருகிறது.

இனிமேலும் காத்திருக்க மாட்டோம், பொறுமையாக இருக்க மாட்டோம். எங் களை கட்டுப்படுத்த முடி யாது.

நாட்டிற்காக போராட தயாராக உள்ளோம். வெற் றியோ அல்லது தோல் வியோ எங்கள் போராட் டத்தை வலுப்படுத்துவோம் என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

தொடர் போராட்டங்க ளால் பாகிஸ்தானில் முக்கிய நகரங்களில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் தாக்குதல்

### 18 பேர் உயிரிழப்பு



(ஜெருசலேம்)

ஆக்கிரமிக்கப்பட்ட மேற் குக் கரையில் உள்ள துல் கரேம் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் சுமார் 18 பேர் கொல் லப்பட்டதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரி வித்துள்ளது.

இஸ்ரேலின் உள்நாட்டு பாதுகாப்பு சேவையான ஷின் பெட் உடன் ஒருங் கிணைந்து நேற்று முன் தினம் வியாழன் அன்று அதன் போர் விமானங்கள் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

துல்கரேமில் உள்ள ஹமாஸின் உட்கட்டமைப் புத் தலைவரை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக இராணுவம் பின்னர் வெளி யிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

இஸ்ரேலிய இராணு வத்தின் கூற்று குறித்து பாலஸ்தீனிய குழு உடன டியாகக் கருத்து தெரிவிக்க வில்லை.

2023 ஒக்டோபரில் காசா பகுதியில் இஸ்ரேல் போரைத் தொடங்கியதில் இருந்து ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை முழுவதும் இஸ்ரேலிய இராணுவத் தாக்குதல்கள் அதிகரித்துள் ளன. ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அலுவலகத் தின் கணக்கின்படி கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 முதல் செப்ரெம்பர் இறுதி வரை மேற்குக் கரையில் 695 பாலஸ்தீனியர்கள் கொல் லப்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்-2024

## தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும்



**கிரகநிலை**

பஞ்சம ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - ரணருண ரோக ஸ்தானத்தில் ராஹு - அஷ்டம ஸ்தானத்தில் குரு - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் - லாப ஸ்தானத்தில் புதன் - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது என கிரக நிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்**

06-10-2024 அன்று புதன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 23-10-2024 அன்று செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார்.

**பலன்**

இந்த மாதம் உங்கள் மன உறுதி அதிகரிக்கும். ராசிநாதன் சுக்கிரன் ராசியில் பயணிக்கிறார். இதனால் பணவரவு அதிகமாகும். குரு பார்வையால் சுபச்செலவு உண்டாகும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். புதிய ஓடர்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். வாக்குவன்மையால் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக தள்ளிப்போன பதவி உயர்வு வர வேண்டிய பணம் வந்து சேரலாம்.

குடும்பத்தில் எதிர்பார்த்த சுமுகமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தருவதாக இருக்கும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும். பெண்களுக்கு பணவரத்து திருப்தி தரும் விதத்தில் இருக்கும். கலைத்துறையினருக்கு இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். அரசியல் துறையினருக்கு அதிஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். மாணவர்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் மற்றவர் மனதில் இடம் பிடிப்பீர்கள்.




**சித்திரை:**

இந்த மாதம் தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். வாக்கு வன்மையால் லாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான காரியங்கள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பதவிகள் கூடுதல் பொறுப்பு கிடைக்கப் பெறுவார்கள்.

**சுவாதி:**

இந்த மாதம் அலுவலகப் பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். நீண்ட நாட்களாக இருந்த குடும்பம் தொடர்பான பிரச்சினைகள் சாதகமாக முடியும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

**விசாகம்:**

இந்த மாதம் குழந்தைகள் கல்விக்காக பாடுபட வேண்டி இருக்கும். பயணங்களால் செலவு ஏற்படும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபட்டு காரிய வெற்றி காண்பீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். விளையாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

**பரிகாரம்:**

நவகிரகத்தில் சுக்கிரனுக்கு வெள்ளிக்கிழமையில் தீபம் ஏற்றி வணங்க குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். மனமகிழ்ச்சிஏற்படும்

**அதிஷ்ட கிழமைகள்**
திங்கள் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்**
20, 21

**அதிஷ்ட தினங்கள்:**
14, 15

## எண்ணியதை செய்து முடிப்பீர்கள்



**கிரகநிலை:**

சுக ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - பஞ்சம ஸ்தானத்தில் ராஹு - களத்திர ஸ்தானத்தில் குரு - அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் புதன் - லாப ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:**

06-10-2024 அன்று புதன் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 23-10-2024 அன்று செவ்வாய் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்:**

இந்த மாதம் ராசியதிபதி செவ்வாய் ராசிக்கு எட்டாம் இடத்தில் சஞ்சாரம் செய்வதால் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் ஏற்படும். ராசிக்கு 11இல் சூரியன் இருப்பதால் எண்ணியதை செய்து முடிப்பீர்கள். பணவரத்து கூடும். தொழில், வியாபாரத்தில் சிக்கல்கள் தீர பாடுபடுவீர்கள். புதிய ஓடர் பிடிக்க அதிகம் அலைய வேண்டி இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். செயற்றிறன் அதிகரிக்கும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

கணவன், மனைவிக்கிடையே இடைவெளி குறைய மனம் விட்டு பேசுவது நல்லது. பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபட வேண்டி இருக்கும்.

பெண்களிற்கு உங்களது செயல்களில் மற்றவர்கள் குறை காண நேரலாம். தெய்வபக்தி அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு புதிய முயற்சிகள் கை கொடுக்கும்.

அரசியல்துறையினருக்கு முன் திட்டமிடல் எதிலும் அவசியம். மாணவர்களுக்கு செயற்றிறமை அதிகரிக்கும். கல்வியில் வெற்றி பெறுவதைக் குறிக்கோளாக கொண்டு செயற்படுவீர்கள்.

**விசாகம்:**

இந்த மாதம் காரிய தடைகள்




நீங்கும். நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும். தன்னை தானே உயர்த்தி கொள்வதுடன் பிறரும் உயர பாடுபடுவீர்கள். மனோதைரியம் கூடும். எல்லா வகையிலும் சுகம் உண்டாகும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

**அனுஷம்**

இந்த மாதம் பணவரத்து அதிகரிக்கும். வயிற்றுக் கோளாறு உண்டாகலாம். தூக்கம் குறையும். எதிர் பாலினத்தாரின் நட்பு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான பணிகள் சாதகமாக நடக்கும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும்.

**கேட்டை:**

இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு மாறும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் சுமாரான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டபடி பணிகளை முடிக்க முடியாமல் தாமதம் ஏற்படலாம். சக ஊழியர்களுடன் கவனமாகப் பழகுவது நல்லது.

**பரிகாரம்:**

மாரியம்மனை தீபம் ஏற்றி வணங்க எல்லா பிரச்சினைகளும் தீரும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். காரிய தடங்கல் நீங்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:**
செவ்வாய் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:**
22, 23

**அதிர்ஷ்ட தினங்கள்:**
16, 17

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் வருடாந்தம் நடத்தும் கட்டுரை, சிறுகதை, கவிதை, சித்திரப் போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

"மாற்றுத் திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவதன் ஊடாக மாற்றுத் திறனாளிகளின் வாழ்வை ஆரோக்கியப்படுத்துதல்." எனும் கருப்பொருளில் ஆக் கங்களை அமைத்தல் வேண்டும்.

போட்டிகள் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என இரு பிரிவுகளின் கீழ் நடத்தப்படும்.

ஆக்கங்கள் உங்களது சொந்த ஆக்கங்களாகவும் குறித்த இப்போட்டிக்காக எழுதப்பட்ட / வரையப்பட்ட புதிய ஆக்கங்களாகவும் ஊடகங்களில் வெளிவராத ஆக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஒருவர் ஒரு ஆக்கத்தினை மட்டுமே அனுப்ப முடியும்.ஆக்கங்களை A4 தாளில் பணினியில் தட்டச்சு செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தினால் எழுதியோ போட்டியாளர் கள் ஆக்கத்துடன் தங்களது முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த ஆண்டு, மாதம், திகதி என்பனவற்றினையும் பாடசாலை மாணவர்களாயின் மேலதிகமாக பாட சாலையின் பெயர், தரம் என்பனவற்றினையும் உள்ளடக்கிய சுயவிபரப் படிவத்தினை கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம், இல:290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

பாடசாலை மாணவர்களாயின் 300-350 சொற்கள் , பொது மக்களாயின் 450-500 சொற்கள் கொண்டதாகவும் கட்டுரை அமைத்தல் வேண்டும்.

பாடசாலை மாணவர்களாயின் 30 வரிகள், பொது மக்களாயின் 40 வரிகளைக் கொண்டதாகவும் கவிதையினை அமைத்தல் வேண்டும். சித்திரத்தினை A4 தாளில் வரைதல் வேண்டும்.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 205 4224 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர் அறிவித்துள்ளனர். (6)

# பொதுத்தேர்தலில் இளைஞர்கள்

## மகளிர்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை




(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் இளைஞர்கள் மற்றும் மகளிர் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என பவ்ரல் அமைப்பு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது.நாட்டில் போராட்டகளத்தின் பின்னர் இடம்பெறுகின்ற பாராளுமன்ற தேர்தல் இதுவாகும்.நாட்டில் மாற்றம் ஒன்றை மக்கள் எதிர்ப்பார்க்கின்றனர்.

எனவே தேர்தலில் இளைஞர்களுக்கும் மகளிருக்கு முன்னுரிமையளிக்குமாறு நாம் அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

குறைந்தபட்சம் 2 பெண் வேட்பாளர்களையேனும் முன்னிறுத்துமாறு கோருகின்றோம் என தெரிவித்தார். (6)

# 30 பக்கெட் சிகரெட்டுக்கள் மீட்பு

## பெண் ஒருவர் கைது



(மன்னார்)

மன்னார் பேசாலை பகுதியில் உள்ள கடை ஒன்றில் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி வெளிநாட்டு சிகரெட்டுக்கள் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள் ளதுடன் பெண் ஒருவரும் கைதாகியுள்ளார்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் விசேட அதிரடிப்படை யினரும் இணைந்து மேற் கொண்ட நடவடிக்கையின் போது குறித்த 30 பக்கெட் வெளிநாட்டு சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட பொருட்களும் பெண்ணும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(6-285)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3236

மனோஜ்




நிரோபா




கிஷாளினி




நிதுன்




தனோஜ்




சரண்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

598





உன்னை எனக்கு அளித்தார். ஒரு பக்கத்தில் உன்னைப் பெற்றதினால் நான் உள்ளமும் உடலும் பூரித்தேன். மற்றொரு பக்கத்தில் உன் தந்தையின் கோபத்துக்கு ஆளாகி விட்டேனோ என்று பயந்தேன். அந்த மகா புருஷர் என் மீது கோபிக்கவில்லை. ஆனால் அவருடைய வாக்கை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை மட்டும் என்மீது சுமத்தி விட்டுப் போனார்."

"மகனே! உன்னை இந்த மண்ணுலக வாழ்க்கையில் பற்றுதல் கொள்ளாமல், சிவபக்த சிகாமணியாகும்படி வளர்ப்பேன் என்று உன் தந்தைக்கு வாக்குக் கொடுத்தேன். அதை நிறைவேற்றி விட்டதாகவே சில காலத்துக்கு முன்பு வரையில் எண்ணி இறுமாந்திருந்தேன்."

ஆனால் என் உயிருக்குயிரான மகனே! என் கண்ணுக்குக் கண்ணான செல்வப் புதல்வனே! சில நாளாக நான் ஏதேதோ கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட பேச்சைக் கேட்கும் போதெல்லாம் என் நெஞ்சு புண்ணாகிறது. நான் கேள்விப்படுவதெல்லாம் பொய்யென்று நீ உறுதி சொல்லி என் நெஞ்சில் உள்ள புண்ணை ஆற்ற மாட்டாயா? என்று அன்னை செம்பியன்மாதேவி கெஞ்சினாள்.

"தாயே! தங்களுடைய மர்மமான வார்த்தைகள் என்னுடைய நெஞ்சையும் புண்ணாக்குகின்றன. தாங்கள் என்ன கேள்விப்படுகிறீர்கள், என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்னிடம் என்ன உறுதி கேட்கிறீர்கள்?" என்று மதுராந்தகன் சீறினான்.

"குழந்தாய்! என் மனத்திலுள்ளதை அறிந்துகொள்ளும் சக்தியை நீ இழந்துவிட்டாய் போலும்! வெளியிட்டுச் சொல்லத்தான் வேண்டும் என்கிறாய் நல்லது சொல்லுகிறேன். உன் மனம் சிவ பக்தியாகிய கங்கை நதியிலிருந்து மண்ணாசையாகிய குட்டையில் விழுந்துவிட்டது என்று கேள்விப்படுகிறேன். சோழ குலத்துச் சிம்மாசனத்தில் ஏற, நீ ஆசை கொண்டிருக்கிறாய் என்று கேள்விப்படுகிறேன். உன் புனிதமான உள்ளத்தை நம் விரோதிகள் அவ்விதம் கெடுத்துவிட்டார்கள் என்று அறிகிறேன். நான் இவ்வாறு கேள்விப்பட்டது உண்மையல்ல என்று நீ கூறினால் என் மனம் நிம்மதி அடையும்!" என்றாள்.

மதுராந்தகன் இதுவரை உட்கார்ந்திருந்த பீடத்திலிருந்து எழுந்து நின்றான். அவனுடைய படபடப்பை பார்த்துத் தாயும் எழுந்தாள்.

"என்னுடைய மனத்தை விரோதிகள் யாரும் கெடுக்கவில்லை. என்னைச் சிம்மாசனம் ஏற்ற விரும்புகிறவர்கள் என் விரோதிகளா? எனக்காகத் தங்கள் உயிரையும் கொடுக்க முன் வந்திருப்பவர்கள் என் விரோதிகளா? ஒரு நாளும் இல்லை. உண்மையில் என் ஜன்ம விரோதி யார்? என்னைப் பெற்றவளாகிய நீதான்!" என்று மதுராந்தகன் கூவினான்.

ஆத்திரமிகுதியால் அச்சமயம் அவன் மரியாதையை மறந்தான் சின்னப் பழுவேட்டரையர் நல்ல வார்த்தைகளினால் அன்னையின் மனத்தை மாற்றும்படி சொல்லியிருந்ததை மறந்து வசை மாரி பொழிந்தான்.

"ஆம் நீதான் என் ஜன்ம சத்துரு வேறு யாரும் இல்லை. நீயும் ஒரு தாயா? நீயும் ஒரு ஸ்திரீயா? உலகத்தில் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளின் உரிமைக்காகப் படாத பாடு படுவார்கள். கதைகளிலும், காவியங்களிலும் கேட்டிருக்கிறேன் வாழ்க்கையிலும் பார்த்திருக்கிறேன். அன்னையின் இயல்புக்கே மாறான இயல்புடைய நீ மானிட ஸ்திரீதானா? அல்லது மனிதப்பெண் உருக் கொண்ட அரக்கியா? நான் உனக்கு என்ன துரோகம் செய்தேன்? நீ எதற்காக இந்தப் பெரும் துரோகத்தை எனக்குச் செய்கிறாய்? எல்லாவித நியாயங்களினாலும் எனக்குச் சேர வேண்டிய இராஜ்யத்தைப் பிடுங்கி இன்னொருவனுக்குக் கொடுப்பதில் உனக்கு என்ன சிரத்தை! என் தந்தையின் விருப்பம் என்று சொல்லுகிறாய். அவருக்கு நீ வாக்குக் கொடுத்ததாகச் சொல்லுகிறாய்.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# வாசிப்பின் பயன்கள்



"உடலுக்கு உடற்பயிற்சி போலவே வாசிப்பு என்பது நம் மனதிற்கும் அறிவிற்கும் மிகவும் உதவுகிறது" என்ற பொன்மொழி வாசிப்பின் முக்கியத்துவத்தை கூறுகின்றது. நூல் வாசிப்பு மனிதனுக்கு இன்பத்தையும் அறத்தினையும் புகட்டும்.

ஆக்கத்தை அளித்திடும் கற்பனை ஆற்றல், பொறுமை, மனநிலைப்பாடு போன்ற பல நல்ல குணங்களை தருகின்றது. மிகச் சிறந்த பொழுதுபோக்காகவும் உதவுகின்றது. புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தால் மூளை சுறுசுறுப்புடன் செயற்படுவதால் நினைவாற்றல் திறனும் அதிகரிக்கும்.

எனவே சிறுவர்களாகிய நாங்கள் வாசிப்பிலிருந்து பயனை பெற்றுக்கொள்வோம்.

எனவே வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குகின்றது என்பதை அறிந்து கொண்டு புத்தகங்கள் வாசிப்பதை வழக்கமாக்கிக் கொள்வோம்.

ஜோ.ரஸ்மிதா
தரம் - 6
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# புத்தகம்



தொட்டு தொட்டு பார்த்தால்
அது வெறும் காகிதம்
தொடர்ந்து படித்தால்
அதுவே வெற்றியின் ஆயுதம்

ஆசானாய் கோளின்றி
கோபமின்றி போதிக்கும்...!
தேடுதல் தந்திடும் தேடவிடாது!
தவறெல்லாம் திருத்திடும்
வன் சொல்லில்லாது...!

என் உலகமாயிருக்கும்
மனிதரேயின்றி போனாலும்
புத்தகம் போதும்
உற்ற நண்பன் போலாகும்.

செ.மேரிதுஷல்யா, தரம்-10
யா/ மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்
றோ.க.த. பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயத்தோடு மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டால், தனது மரியாதை தானே உயரும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஐந்து வீடு கேட்ட பாண்டவரிலும் மேன்மையானவர் நாமன்றோ!

மகாபாரதம் எனும் இதிகாசம் உலக வாழ்வியலுக்கான வேதநூல்.

பாண்டவர்கள் வனவாசம் செல்கின்றனர். காலம் முடிவுற்று நாடு திரும்புகின்றார்கள்.

வனவாசத்தில் அவர்கள் பட்ட துன்ப துயரங்கள் சொல்லிமாளா. அத்தனையும் துரியோதனன் இழைத்த கொடுமை.

என்னதான் இருந்தாலும் பெரிய தந்தையின் மகன் துரியோதனன். ஆகையால் அவனைக் கண்டிப்பது தம்மைக் கண்டிப்பதற்கு ஒப்பானதெனப் பாண்டவர்கள் கருதினர்.

ஆகையால், யுத்தத்தை அவர்கள் தவிர்க்கவே விரும்பினர். அதன் காரணமாக அவர்கள் விட்டுக் கொடுக்க வேண்டிய அத்தனையும் விட்டுக் கொடுத்தனர்.

எதற்கும் துரியோதனன் இசைந்தானல்லன்.

ஈற்றில் பாண்டவர்களாகிய ஐவரும் வாழ்வதன் பொருட்டு ஐந்து வீடேனும் தருக என பாண்டவர்கள் துரியோதனனிடம் கேட்கின்றனர்.

அதற்கும் துரியோதனன் இசையவில்லை. இதன் காரணமாகப் போர் மூழ்கிறது. இது கதைச்சுருக்கம்.

இங்கு பாண்டவர்கள் ஐந்து வீடு கேட்டதென்பது அவர்களின் உன்னதமான பெருந்தன்மை என்பது அறம் உரைக்க வல்லார் கருத்து.

தவிர, பாண்டவர்களைவிட, இவ்விதம் யாரேனும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள் என்பதும் அதன் விதப்புரையாக உள்ளது.

இங்குதான் பாண்டவர்களை விட, ஈழத் தமிழர்களாகிய நாம் இன்னும் ஒரு படி மேல் என்று கூறலாம்.

ஆம், தனிநாடு கேட்டோம் கிடைக்கவில்லை. சமஷ்டி கேட்டோம் இல்லை. சரி, வடக்கு கிழக்கை இணைத்தேனும் தருக என்றோம் அதற்கும் உடன்பாடு இல்லை.

போனால் போகட்டும் மாகாண சபைத் தேர்தலையாவது நடத்துங்கள் அதுவும் சரிவரவில்லை.

இந்நிலையில் இப்போது அநுர குமார திஸாநாயக்க அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

அவரின் பெருந்தன்மை தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை தனித்தனியாகச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கி அவர்களைச் சந்தித்தார்.

அச்சந்திப்பின் ஈற்றில் விடுத்த கோரிக்கைதான் பாண்டவர்களை விட, எம்மை ஒருபடி மேல் உயர்த்தி நிற்கிறது.

ஆம், மதுபானசாலைகளுக்குரிய அனுமதிப்பத்திரங்களைப் பெற்ற அரசியல்வாதிகளின் பெயர் விபரங்களையேனும் வெளியிடுங்கள் என்பதுதான் நாம் வைத்த இறுதிக் கோரிக்கை.

அந்தக் கோரிக்கையேனும் ஏற்றுக்கொள்ளப்படுமா? என்பது தெரியாது.

ஆனாலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அந்தக் கோரிக்கையை ஏற்றால் என்ன? ஏற்காமல் விட்டால் என்ன? குருசேத்திரப் போர் நமக்குள் நடக்கத்தான் போகிறது.

இதை நாம் கூறும்போது போர் எப்போது என்று ஆவலோடு யாரும் கேட்டுவிடாதீர்கள். இறுதிப்போர் 2024 நவம்பர் 14 என்பது மட்டுமே நமக்குத் தெரிந்தது.

### ஈரான் – இஸ்ரேல் யுத்தம்

# உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை உயர்வடைந்தது

(வோஷிங்டன்)

ஈரானின் எண்ணெய் தொழில் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்கள் குறித்து அமெரிக்கா விவாதித்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியதை அடுத்து சர்வதேச சந்தையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று எண்ணெய் விலை 5% உயர்ந்தது.

அதன்படி, ப்ரெண்ட் மசகு எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு 3.72 டொலர்கள் அல்லது 5.03 சதவீதம் உயர்ந்து 77.62 அமெரிக்க டொலர்களாகப் பதிவானது.

அமெரிக்க வெஸ்ட் டெக்சாஸ் இன்டர் மீடியட் மசகு எண்ணெய் 3.61 டொலர்கள் அல்லது 5.15 சதவீதம் அதிகரித்து 73.71 அமெரிக்க டொலர்களாக பதிவானது.

எனினும், இது இந்த ஆண்டின் எண்ணெய் விலையின் தொடக்கத்தில் காணப்பட்ட அளவைவிட குறைவாகவே உள்ளது.

ஈரான் உலகின் ஏழாவது பெரிய எண்ணெய் உற்பத்தியாளராக உள்ளது. அதன் உற்பத்தியில் பாதியை வெளிநாடுகளில் முக்கியமாக சீனாவிற்கு ஏற்றுமதி செய்கிறது.

இஸ்ரேல் மீதான ஈரானின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இஸ்ரேல் பதிலடி கொடுக்கும் என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

தாக்குதல் எப்போது, எங்கு நடத்தப்படும் என்பது உறுதியாகத் தெரியவில்லை. எனினும், ஆதாரங்கள் ஈரானிய முக்கிய எண்ணெய்நிலையங்கள் தாக்குதலில் இலக்கு வைக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

பதிலடி உலக எண்ணெய் விநியோகத்தை ஆபத்தில் ஆழ்த்தக் கூடும் என்ற அச்சத்துக்கு மத்தியில் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. (நி)

# முதல் வெளிநாட்டு பயணமாக இந்தியா செல்லவுள்ள அநுர

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவிற்கு விஜயம் செய்து, பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திகதி நிர்ணயிக்கப்படாத போதிலும் ஜனாதிபதியின் முதலாவது வெளிநாட்டு விஜயம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்று இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இலங்கையின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் ஜனாதிபதி தலைமையில் இடைக்கால அமைச்சரவை ஏற்படுத்தப்பட்டது.ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து அநுர குமார திஸாநாயக்கவிற்கு வெளிநாட்டுத் தலைவர்களும், இராஜதந்திரிகளும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் இலங்கைக் குடியரசின் ஒவ்வொரு அரச தலைவர்களும் இந்தியாவிற்கே தனது முதல் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

அந்தப் பின்னணியில் ஜனாதிபதி அநுரகுமாரவும் தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியா செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# தேர்தலில் களமிறங்க தயங்கும் இளம் அரசியல்வாதிகள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகர உள்ளிட்ட சில முக்கிய முன்னாள் அமைச்சர்கள் போட்டியிடப் போவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் முன்னாள் ராஜாங்க அமைச்சர்களான பிரமித பண்டார தென்னக்கோன் மற்றும் ஹேசா விதானகே ஆகியோரும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர்.

இந்த மூன்று அமைச்சர்களுக்கும் நெருக்கமான தரப்பினர்கள் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளன.

தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த மூவரும் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பிலான தங்களது நிலைப்பாட்டை இதுவரையில் அதிகார பூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மூவரும் கடந்த 2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# பொதுத் தேர்தல்; விலகினார் பந்துல

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை அறிவித்துள்ளார்.

இருபது வருடங்களுக்கு மேலாக ஹோமாகம தொகுதியை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினராகவும் பிரதியமைச்சராகவும் அமைச்சரவை அமைச்சராகவும் தன்னால் இயன்றவரை மக்களுக்காக உழைத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(நி)

# காலியில் தம்பதிகள் வெட்டிப் படுகொலை

காலி அஹங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் வயோதிப தம்பதியர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அஹங்கம வெலஹெங்கொடபகுதியில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அஹங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலஹெங்கொடபகுதியில் ரத்தக் காயங்களுடன் நபர் ஒருவர் வீழ்ந்து கிடப்பதாக பொலிஸாருக்கு நேற்று காலை தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து வயோதிபத் தம்பதியர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

67வயதுடைய ஆணொருவரும் 63 வயதுடைய பெண்ணொருவரும் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

25

ஒதுக்கிய நிரலுடன் ( நிரல் II) தொடர்புபட்ட மாகாண சபை நிரலில் (நிரல் I) உள்ள விடயங்கள்
(ஒன்பதாம் அட்டவணையிலுள்ள நிரல் –I ன் விடய இலக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| மாகாண நிரல் | மாகாண விடயம் இல. | ஒதுக்கிய நிரல் |
|---|---|---|
| • பொலிசும் பொது ஒழுங்கும் | 1 | உள்நாட்டு பாதுகாப்பு |
| • உள்ளூராட்சி | 4 | உள்ளூராட்சி மன்றத் தேர்தல் |
| • வீதிகள் பாலங்கள் அமைத்தல் | 6 | பெருந்தெருக்கள், பாலங்கள் |
| • போக்குவரத்துச்சேவைகள் | 8 | தேசிய போக்குவரத்து |
| • காணி | 18 | காணி வளங்கள் |
| • அபிவிருத்தியும் திட்டமிடலும் | 21 | தேசிய கொள்கையும் திட்டமிடலும் |
| • நூலகங்கள், புராதன சின்னங்கள் | 25 | தேசிய சுவடிக்கூடம், புராதன சின்னங்கள் |
| • கனிப்பொருள் வளம் | 26 | கனிப்பொருள்களும் சுரங்கங்களும் |
| • கூட்டுத்தாபனங்கள் | 27 | கூட்டுத்தாபனங்கள் மீதான வரிகள் |
| • நியதிச் சட்டங்களுக்கு எதிரான தவறுகள் | 32 | சட்டங்களுக்கு எதிரான தவறுகள் |

ஒருங்கிணை நிரலுடன் ( நிரல் நிரல் III ) தொடர்புபட்ட மாகாண சபை நிரலில் (நிரல் I) உள்ள விடயங்கள் (ஒன்பதாம் அட்டவணையிலுள்ள நிரல் –I மற்றும் நிரல்- III ன் விடய இலக்கங்கள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.)

| மாகாண நிரல் | மாகாண நிரல் விடயம் இல. | ஒருங்கிய நிரல் விடயம் இல. |
|---|---|---|
| • திட்டமிடல் | 2 | 1 |
| • கல்வியும் கல்விச் சேவைகளும் | 3 | 2,3 |
| • வீடமைப்பும் நிர்மாணமும் | 5 | 5 |
| • சமூகசேவை, புனர்வாழ்வு | 7 | 7 |
| • கமத்தொழில் கமநலச் சேவை | 9 | 8 |
| • சுகாதாரம் | 11 | 9 |
| • கூட்டுறவுகள் | 17 | 15 |
| • நீர்ப்பாசனம் | 19 | 17 |
| • விலங்கு வேளாண்மை | 20 | 20 |
| • புராதன சின்னங்கள் | 25 | 34 |
| • விளையாட்டு - அபிவிருத்தி | 29 | 13 |
| • நியதிச் சட்டம்- எதிரான தவறுகள் | 32 | 25 |
| • மின்வலுவைத் தோற்றுவித்தல் | 34 | 32 |
| • சூழல் பாதுகாப்பு | 37 | 33 |

### சட்டமாஅதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்படுதல்

மாகாண சபை நிரல், ஒதுக்கிய நிரல் மற்றும் ஒருங்கிணை நிரல் மூன்றிலும் உள்ள விடயங்களில் பல ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டு காணப்படுவதால் பல சிக்கல் நிலையைத் தோற்விப்பதோடு, அவ்விடயங்கள் சம்பந்தமாக இயற்றப்படும் நியதிச்சட்டங்கள் எப்போதும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்படுகிறது.

மாகாண சபை உருவான ஆரம்பத்தில் நியதிச் சட்ட வரைபுகள் உருவாக்கப்படும் போது மாகாண சபைகளில் சட்ட அதிகாரிகள் இல்லாத காரணத்தால் அந்நியதிச் சட்டவரைபுகள் சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து ஆலோசனை பெறும் ஒரு பாரம்பரியம் இருந்தது. இது ஒரு குறுகிய காலத்திற்கு தொடர்ந்தது.

ஆனால் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி அன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களால் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் நியதிச் சட்ட வரைபுகள் ஆளுநரின் ஒப்புதல் பெற அனுப்பப்படும் போது ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்குமுன் அதனை சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து அவரின் அனுமதி பெறவேண்டும். இவ்வாறு அச் சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இச் சுற்றறிக்கை எவ்வளவு தூரம் வலிதானது என்பது தெரியவில்லை.

மாகாண சபையின் இயங்கு நிலை சம்பந்தமாக வடமேல் மாகாண சபையின் முதலாவது முன்னாள் முதல் அமைச்சர் காலஞ்சென்ற திரு காமினி ஜயவிக்ரம பெரேராவின் கருத்து "ஒருங்கிணை நிரலில் பல நல்லவிடயங்கள் உள்ளன.

அவ் விடயங்களில் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நியதிச் சட்டங்களை ஆக்கிக்கொண்டால் மாகாண சபைகளை திறம்பட நடாத்த முடியும்". இவ்வாறு வடமேல் மாகாண சபையின் முதலாவது முன்னாள் முதல் அமைச்சர் காலஞ்சென்ற திரு காமினி ஜயவிக்ரம பெரேரா அவர்கள் 2013 இல் ஒரு பேட்டியில் கூறிய தனது அனுபவக் கருத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அவர் கூறியதாவது "நீங்கள் ஒரு போதும் நம்பமுடியாத ஒரு கருத்தை நான் இங்கு கூற முடியும். அதாவது நான் முதலமைச்சராக கடமையாற்றிய காலப்பகுதியில் மத்திய அரசு எந்தவொரு அதிகாரத்தையும் எமக்குப் பகிரவில்லை. எனக்கு கிடைத்த மாகாண சபையானது புதிதாகப் பிறந்த குழந்தையைப் போன்று இருந்ததோடு, வருமானங்களை பெறும் வழிகள் தொடர்பாக சிந்திக்க அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டியிருந்தது.

அந்த விடயங்களை உரிய முறையில் செய்ததன் காரணமாக எனக்குத் தேவையான அதிகாரங்கள் என்னைத் தேடி வந்தனவே ஒழிய நான் சிறிகொத்தவிற்கோ ஜனாதிபதி மாளிகைக்கோ சென்று அதிகாரம் வேண்டி பிச்சை கேட்கவில்லை. இதை எனது முயற்சிகளுக்கு உறுதுணையாகவிருந்த அரசியல்வாதிகள் மற்றும் அனுபவமிக்க அலுவலர்கள் சாட்சி பகர்வார்கள்.

மேலும் ஒரு விடயத்தை நான் தெரிவிக்க வேண்டும். அதாவது மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை பாதுகாப்பதற்கு நான் பின்பற்றிய செயற்பாடுகளாகும். மாகாண சபைகள் பற்றி அறிந்தவர்களுக்கு அது புதிய விடயமாக இருக்கவில்லை. ஆனால் அதன் ஆரம்ப உறுப்பினர்களாகிய நாம் இன்னோரான விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இன்று பெரும்பாலான மாகாண சபைகள் சிந்திப்பது இடை நேர் விளைவுகள் காணப்படுவதால் மாகாண சபைகளுக்குரியதான சட்டங்களாக உருவாக்கிக் கொள்ளத் தேவையில்லை என்றவாறே. இதை உறுதிப்படுத்தக்கூடிய சிறந்த விடயம் யாதெனில், மூன்று தசாப்த கால வரலாற்றைக் கொண்ட மாகாண சபைகள் இதுவரையில் மிகக் குறைந்த அளவு நியதிச் சட்டங்களையே உருவாக்கியிருக்கின்றன.

அனைத்து மாகாண சபைகளிலும் உருவாக்கப்பட்டுள்ள நியதிச் சட்டங்களைக் கூட்டினால் அது 500இற்கு உட்பட்டே இருக்கும் அதுவும் வருடாந்தம் கட்டாயமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய நிதி (குறை நிரப்பிச் ) சட்டங்களையும் சேர்த்தே அது அமையும்.

ஆயினும் வடமேல் மாகாண சபைக்கு நான் தலைமைத்துவம் வழங்கிய சபை இந்த செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்ட அதேவேளை, வருமானத்தை ஈட்டக்கூடிய அனைத்து பிரிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தி சட்டங்களை தயாரித்து உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிகளை எடுத்தது.

நாம் அங்கு மாகாண சுற்றாடல் அதிகார சபையை உருவாக்கிய போது அதற்கு உரிய அமைச்சிடமிருந்து பாரிய எதிர்ப்பு எழுந்தாலும் அதையும் கட்டுப்படுத்தி உரிய சட்டங்களை உருவாக்கிக் கொள்ள முடிந்ததன் காரணமாக இன்றும் வடமேல் மாகாண சபைக்கு வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு வழியாக அது இருக்கின்றது.

இதற்கு மேலதிகமாக கிராமிய உற்பத்திகளை விற்பனை செய்யும் நோக்கில் சுய தொழில் அடிப்படைச் சட்டம் மற்றும் வடமேல் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் போன்றவை இன்று மிகச் சிறந்த முறையில் வருமானத்தை ஈட்டக் கூடியவையாக இருக்கின்ற அதேவேளை ஏனைய மாகாணங்களில் இல்லாத தனித்துவத்தையும் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாகியிருக்கின்றது.

மாகாண சபைகளுக்கு கிடைக்கின்ற வரி வருமானங்கள் மற்றும் ஏனைய வருமான வழிகள் ஊடாக கிடைக்கின்ற நிதி தொடர்பாக முதலமைச்சருக்கு தெளிவான விளக்கம் இருத்தல் அவசியம். அதன் மூலம் தாம் செய்ய வேண்டிய கடமைகள் தொடர்பாக சுய மதிப்பீடொன்றை செய்ய முடிவதோடு அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி தொடர்பிலும் தெளிவைப் பெற முடியும்.

இத் தெளிவின் மூலம் வடமேல் மாகாணத்தில் முதற் தடவையாக வருமான வரித் திணைக்களம் ஒன்றை உருவாக்க என்னால் முடிந்ததோடு வருமானத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து அபிவிருத்திக்குத் தேவையான நிதியை இலகுவாகக் கையாள முடிந்தது.

அதாவது தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களுக்கும் தமக்கே உரிய மாகாண சபையொன்றை நிர்மாணிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் பலவகையான சந்தேகங்களையும் பயத்தையும் ஏற்படுத்தி அதை பயனற்றதாக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்."

வடமேல் மாகாண சபையின் முதலாவது முன்னாள் முதல் அமைச்சர் காலஞ்சென்ற திருகாமினி ஜயவிக்ரம பெரேரா அவர்கள் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

(இக் கட்டுரையில் பல விடயங்கள் மக்கள் அறிந்து கொள்வதற்காக இணையத்திலிருந்தும் நூல்களிலிருந்தும் தொகுக்கப்பட்டதாகும். அவை ஒரு நீண்ட பட்டியலாகையால் இங்கு அதுபற்றிய விபரம் தரமுடியவில்லை.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37 இந்திய...

கடந்த மாதம் 21ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 37 இந்தியமீனவர்களும் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் படகு ஒன்றின் உரிமையாளர் ஓட்டியாக இருந்ததன் காரணமாக அவருக்கு 20 மாத சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்ததுடன் மேலும் மூன்று மீனவர்களுக்கு 16 மாத சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்ததுடன் மிகுதி 33 மீனவர்களையும் 12 மாத சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்து நிபந்தனையுடன் விடுவித்தார். (ம-7,60)

## உண்ணிக்...

வயது இளம் யுவதியே உயிரிழந்தவராவார்.

காய்ச்சல் காரணமாகக் குறித்த யுவதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவர் உண்ணிக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டு 10 நாட்களாக தொடர் சிகிச்சையளிக்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (ம-7)

## நீர்வேலியில்...

னர்.

தற்போது அரசாங்கம் மதுபானசாலை அனுமதிகளை தடை செய்கின்றபோதும் புதிதாக வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் நீர்வேலிப் பகுதியில் மதுபானசாலை ஒன்றினை தொடர்ந்து திறப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவரும் நிலையில் அதனை உடனே நிறுத்துமாறு கோரி கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று மாலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நீர்வேலிப் பகுதியில் அத்தியார் இந்துக் கல்லூரி, கந்தசுவாமி கோவில் என்பவற்றிற்கு அருகிலே குறித்த மதுபானசாலை திறக்கப்படவுள்ளதால் பாடசாலை மாணவர்கள், கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் இதனால் பாதிக்கப்படுவதாகவும் இதனை உடனடியாக நிறுத்தக் கோரியும் பிரதேச வாசிகள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த விடயம் அடங்கிய மகஜர் ஒன்றினையும் கோப்பாய் பிரதேச உதவி பிரதேச செயலர் சஞ்சீவன் ராதிகாவிடம் பொதுமக்கள் கையளித்தனர். (ம-7,33)

## இலங்கையின்...

சர் விஜித ஹேரத்திடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இது தொடர்பில் ஜெய்சங்கர் தெரிவிக்கையில்,

இலங்கை வெளிவிவகார அமைச்சருடனான பேச்சுவார்த்தைகளை பூர்த்தி செய்துள்ளேன்.

அவருடைய புதிய பொறுப்புகளிற்காக அவருக்கு மீண்டும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளேன்.

இந்திய - இலங்கைக் கூட்டுறவின் பல்வேறு பரிமாணங்களை மதிப்பாய்வு செய்தோம். இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு குறித்து விஜித ஹேரத்திற்கு உறுதியளித்தேன்.

அயல்நாடுகளிற்கு முன்னுரிமை, எங்கள்இரு நாடுகளின்உறவுகளின்முன்னேற்றத்தை எப்போதும் வழிநடத்தும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.(ம-7)

## சமூக...

24.09.2024ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் ஆரம்பித்த முதற்கட்ட விசாரணையில் ஒருவர் தாம் பதிவிட்ட செய்தி பொய்யானது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்.

மற்றுமொரு நபர் அதிக மதுபான பாவனையால் தனக்கு மனநிலை குழம்பி விட்டதாகவும் தற்போது மருத்துவ கண்காணிப்பில் இருப்பதாகவும் சுஹி சிறீதரனிடம் தொலைபேசி ஊடாக மன்னிப்புக் கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## மாகாண சபை...

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கையில்,

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கை ஜனாதிபதியுடன் இலங்கையின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மீனவர்கள் விவகாரம் குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார் என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கையின் ஐக்கியம் ஆள்புல ஒருமைப்பாடு இறைமை ஆகியவற்றைப் பேணும் அதேவேளை தொடர்பில் தமிழர்கள் உட்பட அனைத்து சமூகத்தினரினதும் சமத்துவம், நீதி, கௌரவம், சமாதானம் ஆகியவற்றிற்கான அபிலாசைகளிற்கு இந்தியா ஆதரவளிக்கின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார் என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும், மாகாணசபைதேர்தல்களை விரைவில் நடத்துவதும் இந்த நோக்கங்களை அடைய உதவும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## புதிய...

ஜனாதிபதிரணில் தெரிவித்துள்ளார். உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கொழும்பில் தனிப்பட்ட இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. (ம-7)

## இடை...

தொகையுடன் ஒக்ரோபர் மாதத்தில் அதிகரிக்கப்பட்ட

ஓய்வூதியத்தை வழங்குவது தொடர்பில் ஆட்சேபனை இல்லை என ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.(ம-7)


பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S றோட், சுன்னாகம்
BARATHY
சித்தன்கேணி
(எமது மூன்று நிறுவனங்களிலும்)
A/L 2026 பிரிவு 2
கலை, வர்த்தகப் பிரிவு
இன்று ஆரம்பம் - 05.10.2024 சனிக்கிழமை
சகல பாடங்களும் ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும். நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்டத்தின் முன்னணி ஆசான்களினால்
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
யாழ்.நகரில் - 077 220 9651
சுன்னாகத்தில் - 075 916 0417
சித்தன்கேணியில் - 077 940 8682
(C-1340)



மஹஜன சம்பத
திகதி 2024.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 5615
U 7 4 8 7 7 7
அத சம்பத
U 8 7 7 7
சீட்டிழுப்பு இலக்கம் 190



தன நிதானய
திகதி - 2024.10.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1645
P 04 13 49 62 P
60284



மெகா பவர்
திகதி 04/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1963
M 22 27 30 48 58
23461



லக்கி 7 VIP
திகதி 2024.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 0441
J 0 1 9 8 4 4 J



கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3857
சீட்டிழுப்பு திகதி 04.10.2024
A 25 27 54 55
A 05097



HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 924
கும்பம் 26 30 35 50 கும்பம்
66833 08



உத்தியோகபூர்வ முடிவுகள்
04.10.2024 வெற்றி வாரம் 323
U 3 1 1 1 8 7
57461
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,173,268.00
DLB



SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2589 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 04.10.2024 தினம் வெள்ளி
02 19 28 31 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,198,476.80



சனிதா
திகதி 2024.10.04 வெற்றி வாரம் 4750 வர்ணம் செம்மஞ்சள்
16 18 27 65 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,983,914.80
ரூ.100,000/- 34377



சசிரி
வெற்றி வாரம் 536
சீட்டிழுப்பு திகதி 2024.10.04
04 11 25
பச்சை
08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,962,680/-



சீட்டிழுப்பு வாரம் 4301 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.10.04 தினம் வெள்ளிக்கிழமை
07 17 42 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,497,531.60
182956



ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 33 28 50 68 75
1765
இள கபில
04.10.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 548,532,012.20



வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2415
சீட்டிழுப்பு திகதி : 2024.10.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,841,524.80
அத கோடிபதி ADA KOTIPATHI
40 52 59 73 T
272410


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட விலைக் கழிவு

MARD

சனிக்கிழமை 05.10.2024

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs.379 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 999.00 Anchor 400g | Rs.249.00 ~~300~~ Fems 8 Pcs | Rs. 59.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1799.00 ~~2000~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2589.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 299.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 149.00 ~~175~~ Santoor Soap | Rs. 439.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 379.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3499.00 ~~3980~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |

(C-1329)

Call for information 074 1011 345

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும் வட. இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்) 138, கே.கே.எஸ். வீதி.



புத்தம் புதிய வெளியீடு!

**LOGIC**

பாடத்திற்கான

விஞ்ஞானமுறை

வினா - விடை அமைப்பில்

எஸ்.எஸ்.மனோகரன்

(2185)



யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வருட E-Visa இனை 9000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

(398)



**Happy Supermarket** - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 277/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg றவை | - 283/= | |
| 1Kg அவல் | - 265/= | |
| 1Kg சக்கரை | - 265/= | |
| 1Kg கடலை | - 550/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 222/= | |
| 01 மங்களம் ஊதுபத்தி | - 160/= | ~~200/=~~ |
| 01 சன் பப்படம் | - 190/= | ~~225/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~165/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3400/= | ~~3900/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= | ~~80/=~~ |
| 1Kg கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |

400g Anchor

1000/=



~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.

மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(398)

Happy Supermarket 0777 8080 30



சதாபொன்ஸ் கல்வி நிலையம்

(ஒழுக்கம் சார் கல்வி)

மாலிசந்தி - அல்வாய்

2024 O/L மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம் : 05.10.2024 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு

அனுமதிகள் இன்று முதல்

(C-1338)

077 309 5176, 076 126 0105



யாழ். நகருக்கு அருகில் காணி விற்பனைக்கு

A9 பிரதான வீதியிலிருந்து 250M தூரம் மிகவும் மலிவான விலையில் (1 பரப்பு 390,000 மட்டும்)

இரண்டு, மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள் சிவபூமிக்கு மிகவும் அருகிலும், தொழிற்சாலை, புகையிரத நிலையம், சித்த மருத்துவபீடம், வங்கி, வடமாகாணசபை அனைத்தும் நடை தூரத்தில்

077 012 3075

(2177)



பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

சம்பளம் : 25,000

(பேசித் தீர்மானிக்கலாம்)

(2211)

077 327 6502



ஈழத்து சித்தர்கள் சித்தம்

தொகுப்பு : ஆத்மஞான பூரணர்



நூல் வெளியீட்டு விழா

இடம் : பூரண நிலையம், பலாலி வீதி, யாழ். ஊரெழு

காலம் : 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

நிகழ்ச்சிகள் :

மேலைத்தேயத்தவர்களின் தமிழ் பஜனை

புத்தக வெளியீடு

ஆன்மீக உரை

நூல் வழங்கல் (இலவசம்)




(2206)

தொடர்புகளுக்கு :

076 710 0000, 077 [illegible]



யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

இன்றுமுதல் (04.10.2024) தீபாவளி தினம் வரை

இந்தியன் செலக்ஷனின்

பிரமாண்டமான

தீபாவளி

SPECIAL OFFER!

ஜவுளிக் கொண்டாட்டம்



சாறி OFFER விசேட விலைக் கழிவு

~~1500/=~~ → 1000/=

~~3000/=~~ → 2000/=

~~3500/=~~ → 2500/=

~~4000/=~~ → 2800/=

~~6000/=~~ → 4000/=

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறொக் என ஏராளமான ஆடைத்தெரிவுகள்

இம்முறையும் தீபாவளியை இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாடுங்கள்

(399)

காலம் : 04.10.2024 - தீபாவளி தினம் வரை

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

(வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.